## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - 55.ஸ்ரீகுருநானக் தேவ்

---

சீக்கிய சமயத்திற்கு வித்திட்டு அதை வளர்த்த மிக உயர்ந்த அன்பர் குருநானக் தேவ்.அவரது வாழ்க்கை பக்த விஜயத்தில் வருவதன் மூலம் எம்மதமும் ஒன்றே என்ற சனாதன தர்மத்தின் அடிப்படைக் கொள்கை மீண்டும் உறுதி படுவதைக் காண்கிறோம்.

### குடும்பப் பின்னணி

பாபர் டில்லி ஆட்சி செய்த காலத்தில் இவர் வாழ்கிறார்.பஞ்சாப் மாநிலத்தில் டால்வண்டி என்ற ஊரில் வாழ்க்கை அமைகிறது. இவரது பெற்றோர் ஸ்ரீகாலு - ஸ்ரீமதி த்ரிபதா. இவருக்கு ஒரு இளைய சகோதரி உண்டு.அவர் நானகி.நானக்கின் மனைவி ஸ்ரீமதி சுலகாணி.இவருக்கு இரண்டு மகன்கள். இவரது முதல் சீடர், பணியாளர் ஸ்ரீ மர்த்தனா.

மிகவும் சிறிய வயதில் இவர் மதங்களைப் பற்றி அறிவு பெறுகிறார்.மதங்கள் மூலம் மனிதன் உணர வேண்டிய தத்வம் ஒன்றே என்பதை உணர்ந்து தெளிந்ததால் இவரது மனம் சனாதனத் தன்மை கொண்டது.இவரது தந்தையும் ஒரு உயர்ந்த பண்புடைய இஸ்லாமிய அன்பரின் கடையில் கணக்கராக இருந்ததால் அம்மதத்தின் பல தத்வங்களை அவர் மூலம் இவர் கற்றார்.இவர் வாழ்ந்த காலம், பாரத தேசத்தில் வேற்று மதங்கள் வேர் ஊன்றி இருந்த காலம்.மிகவும் வன்முறை வளர்ந்த காலம்.மதமாற்றமும் போர்களும் சூழ்ந்த காலம்.

### வரகவியும் இன்னிசைத் திறனும்

தான் உணர்ந்த உண்மைகளை மிகவும் எளிய மொழியில் தினமும் அவர் மாலையில் தன் ஊர்க் கோயிலில் அழகாகப் பாடுவார்.மர்த்தனா அதற்கு டோலக் அடிப்பார்.வரகவியான இவரது எளிய ஆன்மீகக் கருத்துக்கள் கொண்ட பாடல்களும் இசைத்திறனும் பல மக்களைச் சென்று அடைந்தது.

இவர் மூன்று முறை பாரத தேசத்தின் பல பகுதிகளுக்கும் அரேபியா, ஸ்ரீலங்கா, திபெத் போன்ற இடங்களுக்கும் ஆன்மீகப் பயணம் மேற்கொண்டார்.சுமார் 25 ஆண்டுகள் இவர் ஆன்மீகப் பயணம் செய்து மக்களின் இடையில் ஆன்மீக எழுச்சியை ஏற்படுத்தினார்.

பல மதங்களைத் தெளிவுற அறிந்த இவரது ஞானமும் தெளிவுற்றது.சத்யமான

தெய்வம் ஒன்றே.அதைக் கொண்டு வன்முறை மூலம் போர்கள் செய்வது அறியாமை என்ற ஆழமான உண்மையை உணர்த்தினார்.

இவர் தன் ஊரில் தன் நிலத்தில் எழுப்பிய இரண்டு கோயில்களையும் தானே ஆள் கொண்டு இடித்தார்.மக்களின் விரோதப் போக்குக்குத் தான் துணை நிற்பதற்கு இல்லை என்று கூறினார்.

மெக்கா மதீனாவுக்குச் சென்று தரிசனம் செய்தார்.

பாபர் மஹாராஜாவின் நன்மதிப்பைப் பெற்றவர் நானக்.

தனது எளிய ஆன்மீகக் கருத்துக்களை எளிய கவிதைகள் மூலம் அவர் இயற்றினார்.அதில் உயர்ந்த ஆன்மீகக் கருத்துக்கள் கொண்ட பல அன்பர்களின் கருத்துக்களையும் சேர்த்தார்.அதுவே இன்று சீக்கிய மார்கத்தின் புனித நூலான க்ரந்த் சாஹிப் ஆகும்.

குருவின் வழிகாட்டலின் மூலம் மனிதன் தன்னுள் நித்யமாய் இருக்கும் அமிர்தமயமான ஆன்மாவை உணர முடியும். அதன் மூலம் சேவையும், அன்பும் பெருகும்.அப்போது உலகம் செழிக்கும்.இதுவே அவரது எளிய ஆன்மீக உயர்ந்த தத்வம் ஆகும்.

ஹரி ஓம்!